**செய்தி வெளியீடு எண்: 855** **நாள்: 23.11.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

கடந்த 15–ம் தேதி தமிழகத்தை தாக்கிய 'கஜா' புயல் ஏற்படுத்திய சேதத்தினை தொடர்ந்து பாதிக்கப்பட்ட ''கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, கரூர், தேனி, சிவகங்கை மற்றும் திண்டுக்கல்'' மாவட்டங்களில் உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி செலுத்துவோர் அக்டோபர் 2018 திங்களுக்கான மாதாந்திர நமூனாக்களை தாக்கல் செய்வதற்கு மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். அச்சிரமத்தை களையும் நோக்கிலும், இயற்கை பேரிடரால் ஏற்பட்டிருக்கின்ற இத்தகைய காலதாமதத்தினால் 21.11.2018 முதல் நாள் ஒன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய ரூ.200/– தாமத கட்டணம் மற்றும் வட்டி போன்றவைகளிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்பதை கருத்திற் கொண்டும், அக்டோபர் 2018 திங்களுக்கான படிவம் GSTR 3B மற்றும் படிவம் GSTR 1 ஆகியவற்றை தாக்கல் செய்வதற்கு ஒரு மாத கால அவகாசம் அளிக்கப்பட வேண்டிய அவசியத்தினையும் தமிழக அரசு, சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்திடம் பரிந்துரைத்துள்ளது. அதனடிப்படையில் மேற்குறிப்பிட்டுள்ள பதினோரு மாவட்டங்களில் உள்ள சரக்குகள் மற்றும் சேவைகள் வரி சட்டத்தின் கீழ் பதிவுப்பெற்று வரி செலுத்துவோர், அக்டோபர் 2018 திங்களுக்கான படிவம் GSTR 3B மற்றும் படிவம் GSTR 1 ஆகியவற்றை தாமத கட்டணம் மற்றும் வட்டியில்லாமல், 20.12.2018 முடிய தாக்கல் செய்ய சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தின் ஒப்புதல் கோரப்பட்டு எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான உரிய அறிவிக்கை ஒப்புதல் பெறப்பட்ட பிறகு முறையாக வெளியிடப்படும் என்று தெரியவருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**